**O.S. No. 19/2021**
**Date : 16.04.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 2 **திரு. சின்னராஜ்**

**3–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் இந்த கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். இந்த கிரைய ஒப்பந்தம் பதிவில்லாத கிரைய ஒப்பந்தம் என்னும் பட்சத்தில் 3ம் பிரதிவாதிக்கு அந்த ஒப்பந்தம் குறித்த விபரம் தெரிய வாய்ப்பில்லை என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. 3–ம் பிரதிவாதி யார் என்று எனக்கு தெரியாது. 3–ம் பிரதிவாதி இந்த தாவா சொத்தை பதிவு கிரைய ஆவணம் வாயிலாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

2. 3ம் பிரதிவாதிக்கு பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ள பட்சத்தில் பதிவு செய்யாத கிரைய ஒப்பந்தம் அவரை கட்டுப்படுத்தாது என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. வாதி எனக்கு மிகவும் வேண்டியவர் என்ற காரணத்தினால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் 1 மற்றும் 2 தரப்பு குறுக்கு விசாரணை**

3. எனக்கு வாதி ராஜேஸ் கண்ணா உறவுமுறை கிடையாது, தாய்மாமா கிடையாது. நாங்கள் தற்போது இருவரும் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அவர் எனது நண்பர் என்ற வகையில் எனக்கு அவர் பழக்கம். 6 வருடத்திற்கு முன்பு அவர் என்னை ஆண்டிபட்டிக்கு அழைத்தார் என்று நான் சொன்ன தேதி தான் என்னிடம் காண்பிக்கக்கூடிய வா.த.சா.ஆ.1 ஏற்பட்ட தேதி என்றால் சரிதான்.

4. அன்றைய தினம் தான் என்னை வாதி அழைத்துக் கொண்டு ஆண்டிப்பட்டி எரதிம்மக்காள்பட்டிக்கு அழைத்துச் சென்றார் என்றால் சரிதான்.

மாலை 05.00 மணிக்கு தான் நாங்கள் இங்கிருந்து கிளம்பி சென்றோம். நான் அங்கு சென்றபோது ஆவணங்கள் அனைத்தையும் கோவிந்தராஜ் வைத்திருந்தார் என்றால் சரிதான். ஒப்பந்தமும் அவர் வசம் தான் இருந்தது என்றால் சரிதான். அந்த பத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை, அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கோவிந்தராஜிற்கு ரூ.15 லட்சம் முன்பணம் கொடுக்க செல்வதாக என்னிடம் வாதி சொன்னார், மற்ற எந்த விபரமும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

5. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. ராஜேஷ் கண்ணா அழைத்ததன் பேரில் தான், நான் இன்று சாட்சியளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட பத்திரமானது ராஜேஷ் கண்ணா பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 31.07.2019 ஆம் தேதி ராஜேஷ் கண்ணா பெயரில் மேற்கண்ட பத்திரம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் போகும்போது என்னை சாட்சி கையெழுத்து போடச் சொல்லி யாரும் கேட்கவில்லை என்றால் சரிதான்.

6. ரூ.15 லட்சம் பணம் 500 ரூபாய் நோட்டுகளாக எடுத்து வந்தார். 2 லட்சம் ரூபாய்க்கு மேல் ரொக்கம் கொடுக்கக் கூடாது என்றும் ரூ.15 லட்ச ரூபாய்க்கு மேல் ரொக்கமாக கொடுத்து தவறு என்றும், நான் அவ்வாறு பணம் கொடுத்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. ரூ.15 லட்சம் பணம் கொடுத்ததை நான் நேரில் பார்த்தேன். ராஜேஷ் கண்ணா அன்றைய தினம் கொடுத்தது வெறும் ஐந்து லட்சம் தான் என்றும் நான் 15 லட்சம் ரூபாய் பணம் கொடுத்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

7. வா.த.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் ரொக்கமாக ஐந்து லட்சம் ரூபாய் தான் கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஐந்து லட்சம் ரூபாய் தான் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கப்பட்டது என்றும், ரூ.15 லட்சம் பணத்தை நான் கொடுத்ததை பார்த்தேன் என்று பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால்

சரியல்ல. வாதி எனக்கு நண்பர் என்ற வகையில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.04.16 17:01:30 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.